# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 08 /பேரூ/2024**
**நாள் : 27.06.2025**

திரு. N. வெங்கடேஷ் பிரபு,
அலங்காநல்லூர்,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர், பஜனை மடத் தெரு, புதிய 5வது வார்டு என்ற முகவரியை சேர்ந்த திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவரது 13.05.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.05.2024 அன்று பெறப்பட்டு, 08/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர், பஜனை மடத் தெரு, புதிய 5-வது வார்டு, என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 13.05.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் N. வெங்கடேஷ் பிரபு ஆகிய நான் கடந்த 10.11.2023ஆம் தேதியிட்டு, அலங்காநல்லூர் பேரூராட்சி பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005-ன்படி சில தகவல்கள் வழங்க வேண்டி விண்ணப்பித்திருந்தேன். அந்த மனுவின் பேரில் கடந்த 11.12.2023ஆம் தேதியிட்டு பொது தகவல் அலுவலர் அவர்கள் உரிய தகவலை தர மறுத்தும், ஒரு முழுமையற்ற மற்றும் திருப்தி இல்லாத தகவலை ஏதோ கடமைக்கு வழங்கினார்.

அதனால், நான் 22.12.2023ஆம் தேதியிட்டு முழுமையான மற்றும் விரிவான தகவல் வழங்க வேண்டி முதல் மேல்முறையீட்டு பொது தகவல் அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு ஒரு மனு அனுப்பியிருந்தேன். அந்த முதல் மேல் முறையீட்டு மனுவின் பேரில் மேல்முறையீட்டு பொது தகவல் அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்கள், அலங்காநல்லூர் பேரூராட்சி பொது தகவல் அலுவலரான செயல் அலுவலரை, தகவல் வழங்க வலியுறுத்தி கடந்த 08.01.2024ஆம் தேதியிட்டு ந.க.எண்.1642240/2023/பே3 என்ற எண்ணிட்டு வலியுறுத்தல் கடிதம் அனுப்பியிருந்தார். அந்த வலியுறுத்தல் கடிதத்தின் பேரில், கடந்த 15.02.2024ஆம் தேதியிட்டு பொது தகவல் அலுவலராகிய செயல் அலுவலர் அவர்களால் செலவு செய்யப்பட்டு, பட்டுவாடா செய்யப்பட்ட செலவீனங்களின் விபரம் தொடர்பான முழுமையற்ற மற்றும் திருப்தியற்ற தகவல் பட்டியல் நகல் வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட தகவலை படித்து பார்க்கும் போது மிகவும் அதிர்ச்சிகரமாக இருந்தது. எனவே, மீண்டும் கடந்த 29.02.2024ஆம் தேதியிட்டு செயல் அலுவலரால் செலவு செய்யப்பட்ட செலவீனங்களின் பில் நகல், காசோலை நகல் மற்றும் தினசரி புத்தகம் (Day Book) நகல்கள் வழங்க வேண்டி, பேரூராட்சி பொது தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன்படி மனு அனுப்பியிருந்தேன். அந்த மனுவிற்கு பொது தகவல் அலுவலராகிய செயல் அலுவலர் அவர்கள் 25.03.2024ஆம் தேதியிட்டு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் 25.04.2024 அல்லது 26.04.2024 ஆகிய இரு தினங்களில் உகந்த ஒரு நாளில் தாங்கள் நேரில் வந்து ஆவணங்களை பார்வையிட்டு தாங்கள் கேட்ட ஆவணங்களின் நகல்கள் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்று கூறி ஒரு கடித குறிப்பாணை அனுப்பியிருந்தார். மனுதாரர் ஆகிய நான் பொது தகவல் அலுவலர் ஆகிய அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு கடந்த 20.04.2024 தேதியிட்டு 25.04.2024 தேதியன்று N. வெங்கடேஷ் பிரபு ஆகிய நானும் எனக்கு உதவியாளராக ஒருவரும் ஆவணங்களை பார்வையிட வருவதாக ஒரு தகவல் கடிதம் பொது தகவல் அலுவலருக்கு அனுப்பிவிட்டு கள ஆய்விற்கு கடந்த 25.04.2024ஆம் தேதியன்று சென்றோம். அந்த கள ஆய்வில் ஆவணங்களை பார்வையிட ஆவணங்களை கேட்டதற்கு தினசரி புத்தகம் (Day Book) தவிர மற்ற அனைத்து ஆவணங்களையும் பொது தகவல் அலுவலரான செயல் அலுவலர் அவர்கள் மற்றும் அலங்காநல்லூர் பேரூராட்சி அலுவலர்கள் அனைவரும் கூட்டாக ஆவணங்கள் அனைத்தும் தணிக்கை அலுவலகத்தில் தணிக்கை அலுவலரிடம் தணிக்கையில் உள்ளது என்று கூறி, நான் கேட்ட எந்த ஆவணங்களையும் வழங்க மறுத்து விட்டனர். எந்த ஆவணங்களையும் வழங்கக் கூடாது என்ற எண்ணத்தில் நான் கள ஆய்விற்கு செல்வதற்கு முன்பாக அலுவலக கோப்புகள் மற்றும் ஆவணங்கள் உள்ள அறையை பூட்டி, சேர் மற்றும் டேபிள் கொண்டு அடைத்து வைத்திருந்ததை நான் கள ஆய்வின் போது காண முடிந்தது. எனவே அலுவலக ஆவணங்கள் அனைத்தும் தணிக்கை அலுவலரிடம் தணிக்கையில் உள்ளது என எழுதி கையொப்பமிட்டு கடிதம் வழங்குமாறு பொது தகவல் அலுவலரான செயல் அலுவலரிடம் கேட்டதற்கு அப்படியெல்லாம் எழுதி கொடுக்க முடியாது என கூறி மறுத்துவிட்டார்.

பொது தகவல் அலுவலரான செயல் அலுவலர் மக்களின் வரி பணத்திலும், பொது மக்கள் பொது நிதியிலும் செலவு செய்யப்பட்டு பட்டுவாடா செய்யப்பட்ட செலவீனங்களின் விபர பட்டியல் நகல், பில் நகல், காசோலை நகலையும் தர மறுத்தும், மூடி மறைக்கும் நோக்கத்தில் காலம் தாழ்த்தியதை பார்க்கும் போது அலங்காநல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் மிகப் பெரிய ஊழல் மற்றும் பெரிய அளவில் நிதி முறைகேடு நடந்திருப்பது தெரிய வருகிறது. அது போலவே, பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட முழுமையற்ற மற்றும் பாதி மறைக்கப்பட்ட தகவலை பார்க்கும்போது ஆச்சரியமூட்டும் அளவில் செய்த செலவினங்களுக்கும், பார்க்கப்படாத

பணிகளுக்கும், கணக்கு காட்டப்பட்டு நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது என்று அப்பட்டமாக தெரிய வருகிறது. அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரான பொதுத் தகவல் அலுவலரால் வழங்கியிருக்கும் செலவு விபரங்களின் தகவல் பட்டியல் நகலில் உள்ள செலவு விபரங்களுக்கும், களத்தில் நடைபெற்ற பணிகளுக்கும் சம்பந்தமில்லாமல் உள்ளது. எனவே, பெரிய அளவில் ஊழல் மற்றும் நிதி முறைகேடு நடந்திருப்பது வெட்ட வெளிச்சமாகவும், அப்பட்டமாகவும் தெரிய வருகிறது. இதனால், அலங்காநல்லூர் பேரூராட்சியின் வளர்ச்சியும், நற்பெயரும் பெரிய அளவில் பாதிக்கப்படுகிறது. மேலும், செயல் அலுவலரால் குடிநீர் உபகரணங்கள் வாங்கியது, தெருவிளக்கு உபகரணங்கள் வாங்கியது, பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்துள் மற்றும் கொசு மருந்து அலங்காநல்லூர் பேரூராட்சி பகுதியில் அதிகளவில் பயன்படுத்தப்படுவதேயில்லை. இருந்த போதும் பிளிச்சிங் பவுடர், கொசு மருந்து வாங்கியது என்று அதிகளவிலான தொகைக்கு போலியாக பில் போடப்பட்டு, பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு, பினாயில், கொசுமருந்து வாங்கியது என்றும், பைப்லைன் சரி செய்தது, அலங்காநல்லூர் பேரூராட்சியில் அதிகமான கழிப்பறைகள் செயல்படாமல் உள்ள நிலையில் அதிக அளவில் செப்டிக்டேங்க் சுத்தம் செய்தது என்றும், JCB மூலம் பணி செய்தது என்றும், மின்மோட்டார் பழுது நீக்கியது மற்றும் சின்டெக்ஸ் டேங்க் பழுது நீக்கியது என மாதம் மாதம் அதிகமான எண்ணிக்கையில் போலியாக பில் வாங்கி கொண்டு, கணக்கு காட்டி பொதுமக்களின் வரி பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. அதுபோல், பணிகளுக்கு வாங்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகளுக்கு வழங்கப்படும் பில் பணத்தை, வங்கி கணக்கு மூலம் மாற்றப்படும் காசோலைகளாக வழங்காமல் வங்கி கணக்கு அல்லாதவர்களாலும் மாற்றப்படக்கூடிய காசோலைகளாக வழங்கப்படுகிறது. அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அலங்காநல்லூர் கரூர்வைஸ்யா வங்கி மற்றும் இன்னும் பிற வங்கிகள் மூலமாக வேறு ஒருவர் பெயரில் காசோலைகளை நிரப்பி, அலங்காநல்லூர் பேரூராட்சி பணியாளர்களே நேரடியாக வங்கிக்கு சென்று அடுத்தவர் பெயரில் நிரப்பப்பட்ட காசோலைகளின் தொகைகளை முறைகேடாக பெற்று வருவதன் மூலமும் பேரூராட்சி செயல் அலுவலர்களின் நிதி செலவு அதிகார வரம்பான ரூபாய் பத்தாயிரத்திற்கு (ரூ.10,000) உட்பட்டு ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் (ரூ.9900)க்கு மிகாமல் பில் போடப்பட்டு, கணக்கு காட்டப்பட்டு முறைகேடான காசோலைகள் மூலம் அதிக அளவில் மக்களின் வரிப்பணம் முறைகேடாக செலவு செய்யப்பட்டு அலங்காநல்லூர் பேரூராட்சியில் அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரால் கையாடல் செய்யப்பட்டு மிகப்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது, சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணமாகிறது.

எனவே, மதிப்பிற்குரிய தாங்கள் அலங்காநல்லூர் பேரூராட்சியில் வரவு, செலவு கோப்புகள், மாதிரி விலைப்புள்ளி பட்டியல், வங்கி காசோலை விபரம், பொருட்கள் கொடுக்கும் ஒப்பந்ததாரர்கள் விபரம், பணி செய்த ஒப்பந்ததாரர்கள் பணி உத்தரவு விபரம், வாங்கிய பொருட்கள் இருப்பு விபரம், கோப்புகள் மற்றும் செயல் அலுவலரால் செலவு செய்யப்பட்டு பட்டுவாடா செய்யப்பட்ட செலவினங்கள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் தாங்கள் நேரடியாக அலுவலகத்தில் ஆய்வு செய்து, களத்தில் இந்த செலவினங்கள் மூலம் செய்யப்பட்ட பணிகளையும், பணியின் தரத்தையும், பொருட்களின் தரத்தையும் ஒப்பிட்டு பார்த்து பொது மக்களின் வரி பணத்தில் நிதி முறைகேட்டிலும், ஊழலிலும் ஈடுபடும் மற்றும் ஊழல் திளைக்கும் அலங்காநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து பொது மக்களின் வரி பணத்தையும், அலங்காநல்லூர் பேரூராட்சி நிர்வாகத்தையும் காத்திடுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 15.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. இதற்கிடையில் மனுதாரர் திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ள 13.01.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" நான் கடந்த 13.05.2024ஆம் தேதி ஒரு புகார் கடிதத்தை தங்களுக்கு அனுப்பியிருந்தேன். நான் நேரடியாக மீண்டும் அலங்காநல்லூர் பேரூராட்சி சென்று, கள ஆய்வும் நேரடியாக பணிகளை பார்வையிட்டேன். அதில் ஏதும் குறைபாடுகள் கண்டறிய முடியவில்லை. பேரூராட்சி அலுவலகம் சென்று நேரடியாக செலவுச் சீட்டுக்களையும் வரவு தொகைகளையும் வேலைகளையும் ஆய்வு செய்தேன். அதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என அறிந்தேன். எனவே, நான் தங்களுக்கு அனுப்பி இருந்த புகார் மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன். எனவே, என் மனு மீது மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. பா. ஜெயலட்சுமி என்பவர் தனது 28.03.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 35/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவரின் 10.11.2023ஆம் தேதிய தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட மனுவிற்கு 11.12.2023-ஆம் தேதியில் உரிய தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், 22.12.2023ஆம் தேதியில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டதற்கு, அலங்காநல்லூர் பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 269/2023 நாள் 15.02.2024 கடிதத்தின்படி மனுதாரரால் கோரப்பட்ட செலவு விவரங்கள் மொத்தம் 149 பக்கங்கள் கொண்ட நகல்கள் இணைக்கப்பட்டு மனுதாரருக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது.

மேலும், 29.02.2024ஆம் தேதியில் மனுதாரரால் அனுப்பப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 மனுவிற்கு கள ஆய்வு செய்து உரிய ஆவணங்களை பெற்றுக்கொள்ள செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 67/2024 நாள் 25.03.2024 மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 25.04.2024-ஆம் தேதியன்று மனுதாரருடன் ஒரு உதவியாளர் பேரூராட்சி அலுவலகத்தில் வந்து ஆவணங்களை கள ஆய்வு செய்தனர். கள ஆய்விற்கு அலுவலக மெயின் அறையில் மனுதாரர் பார்வையிடுவதற்கு உரிய வசதிகள் செய்து தரப்பட்டது. மேலும், தணிக்கைக்கு அனுப்பப்பட்ட பட்டியல் நகல்கள் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்காணும் கள ஆய்வு செய்து முடிக்கப்பட்டதற்கான அறிக்கையுடன் 22 பக்கங்களுக்கு நகல்கள் வழங்க மனுதாரரால் கோரப்பட்டதற்கு 15.05.2024-ஆம் தேதியில் உரிய நகல்கள் பதிவஞ்சல் மூலம் மனுதாரருக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அலங்காநல்லூர் பேரூராட்சியில் 04/2022ஆம் மாதம் முதல் 10/2023 முடிய உள்ள மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வரவு மற்றும் செலவினங்கள் அனைத்தும் பேரூராட்சி மன்ற தீர்மானங்களில் கீழ்க்கண்ட விவரப்படி அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.

| வ.எண். | செலவுச்சீட்டு மாதம் | மன்ற தீர்மானம் எண். / நாள் |
|---|---|---|
| 1 | 04/2022 | 28/ 19.05.2022 |
| 2 | 05/2022 மற்றும் 06/2022 | 75/29.07.2022 |
| 3 | 07/2022 | 79/17.08.2022 |
| 4 | 08/2022 | 88/29.09.2022 |
| 5 | 09/2022 | 97/18.10.2022 |
| 6 | 10/2022 | 117/29.11.2022 |
| 7 | 11/2022 மற்றும் 12/2022 | 133/09.01.2023 |
| 8 | 01/2023 | 155/28.02.2023 |
| 9 | 02/2023 | 166/29.03.2023 |
| 10 | 03/2023 | 173/25.04.2023 |
| 11 | 04/2023 | 179/16.05.2023 |
| 12 | 05/2023 | 192/28.06.2023 |
| 13 | 06/2023 | 205/28.07.2023 |
| 14 | 07/2023 | 210/31.08.2023 |
| 15 | 08/2023 | 215/29.09.2023 |
| 16 | 09/2023 | 227/30.10.2023 |
| 17 | 10/2023 | 235/28.11.2023 |

மேலும், அத்தியாவசிய அவசியத்தின் காரணமாகவே, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது எனவும், மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் வரவு மற்றும் செலவினங்கள் குறித்த செலவுச் சீட்டு விவரங்களை பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு வைத்து ஒப்புதல் பெற்று உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படுகிறது.

தவிர இச்செலவினங்கள் அனைத்தும் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையினரால் கள ஆய்வு செய்யப்பட்டு விதிமீறல், நிதிஇழப்பு முறைகேடுகள் குறித்த செலவினங்கள் கண்டறியப்படின் அதனடிப்படையிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள வரவு மற்றும் செலவு விவரங்கள் முழுவதுமாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மன்ற ஒப்புதல் பெறப்பட்டும், தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டும் வழங்கப்படுகிறது. மேலும் அலங்காநல்லூர் பேரூராட்சியில் 2023-2024-ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை மூலம் பேரூராட்சியின் வரவு மற்றும் செலவினங்கள் அனைத்திற்கும் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, தணிக்கை அறிக்கை வெளியிடுவதற்கு நடவடிக்கையில் உள்ளது. இருப்பினும், அலங்காநல்லூர் பேரூராட்சி பகுதியில் முறையாக மாசு கட்டுப்பாட்டு வாரியம் உள்ளிட்ட துறைகளில் அனுமதி பெறாமல் மனுதாரரால் குடியிருப்பு பகுதியில் நடத்தப்பட்டு வந்த லேத் வெல்டிங் பட்டறையினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD) No.1191/2023, நாள் 23/01/2024-ல் இணை பதிவாளர் (சி.எஸ்) அவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் பேரூராட்சியின் மூலம் ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் லேத் & வெல்டிங் பட்டறையினை மூடி சீலிடப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பேரூராட்சியின் அலுவலக செயல்பாடுகள் குறித்து தொடர்ச்சியாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி மனுக்கள் வரப்பெற்றுள்ளது.

மேலும் திரு. N. வெங்டேஷ் பிரபு என்பவரால் 13.01.2025ஆம் தேதியன்று அனுப்பப்பட்ட மனுவில் நான் கடந்த 13.05.2024 தேதியிட்டு ஒரு புகார் கடிதத்தை தங்களுக்கு அனுப்பியிருந்தேன். நான் நேரடியாக மீண்டும் அலங்காநல்லூர் பேரூராட்சி சென்று கள ஆய்வும் நேரடியாக பணிகளை பார்வையிட்டேன். அதில் ஏதும் குறைபாடுகள் கண்டறிய முடியவில்லை. பேரூராட்சி அலுவலகம் சென்று நேரடியாக செலவு சீட்டுக்களையும், வரவு தொகைகளையும், வேலைகளையும் ஆய்வு செய்தேன். அதில் எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை என அறிந்தேன். எனவே நான் தங்களுக்கு அனுப்பி இருந்த புகார் மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன். எனவே என் மனு மீது மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 03.06.2025 அன்று இம்முறைமன்ற அலுவலகத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.05.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவர் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரரான அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. பா. ஜெயலட்சுமி என்பவர் தனது கடித ந.க.எண். 35/2025/பே3 02.06.2025 நாளிட்ட கடிதத்தில் சொந்த பணியின் காரணமாக 03.06.2025 அன்றைய விசாரணைக்கு வர இயலாத காரணத்தினால் தனது சார்பாக பேரூராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. மு. பாலசந்திரன் என்பவர் விசாரணைக்கு ஆஜராக அனுமதிக்குமாறு வேண்டி

கொண்டதன் பேரில், பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. மு. பாலசந்திரன் என்பவர் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "மனுதாரர் திரு N. வெங்கடேஷ்பிரபு என்பவர் 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவில் கோரிய படி அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 2021–22, 2022–23 மற்றும் 01.04.2023 முதல் 31.10.2023 வரையிலான காலங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரங்கள் 149 பக்கங்கள் அடங்கிய தேதி வாரியான Bank Payment voucher details 15.02.2024 அன்று அளிக்கப்பட்டது.

- மேற்காணும் தகவல்களில் திருப்தியற்ற நிலையில் மனுதாரர் மீண்டும் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின கீழ் பட்டியல் (Bill), காசோலை மற்றும் தினசரி புத்தகம் ஆகியவற்றின் நகல்களை கோரினார்.

- மனுதாரர் கோரும் நகல்கள் அளிக்க வழிவகையில்லை என்பதால் மனுதாரர் பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக பார்வையிட்டு உரிய ஆவணங்களின் நகல்கள் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்தபடி, மனுதாரர் 25.04.2024 அன்று அலுவலகத்தில் வருகை புரிந்து, அவர் கோரிய தகவல்கள் 15.05.2024 அன்று வழங்கப்பட்டன.

- பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் பேரூராட்சி மன்றத் தீர்மானங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- மேலும் பேரூராட்சியின் வரவு–செலவினங்கள் அனைத்தும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்படுகிறது. 2023–24 ஆம் ஆண்டிற்கான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை அறிக்கை வெளியிடும் நடவடிக்கையில் உள்ளது.

- மனுதாரர், பேரூராட்சிக்குட்பட்ட குடியிருப்பு பகுதியில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு துறையின் அனுமதியின்றி, லேத் பட்டறை நடத்தி வந்ததால், அப்பட்டறையினை, மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையால் W/P (MD) No.1191/2023, நாள்.23.01.2024–ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி பேரூராட்சியால் பட்டறையை சீலிடப்பட்டு மூடப்பட்டதால், காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறு புகார் அளித்துள்ளார்.

- இதற்கிடையில் மனுதாரர் 13.01.2025 அன்று பேரூராட்சியில் வருகை புரிந்து தனது புகார் மனுவில் தெரிவித்திருந்த பேரூராட்சியின் செலவு சீட்டுக்களையும், வரவு தொகைகளையும் மற்றும் பணிகளையும் மனுதாரர் ஆய்வு செய்தார். மனுதாரர் ஆவணங்களை பார்வையிடும்போது பேரூராட்சி செயல் அலுவலர், இளநிலை உதவியாளர் திருமதி. அபிதா உட்பட இளநிலை உதவியாளராக பணிபுரியும்

மு. பாலச்சந்திரன் என்கின்ற நானும் உடனிருந்தோம் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரர் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவு இனங்களில் எவ்வித குறைபாடுகளும் கண்டறிய முடியவில்லை என 13.01.2025 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.

- மேற்காணும் நிலையில், அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 2021-22, 2022-23 மற்றும் 01.04.2023 முதல் 31.10.2023 வரையிலான காலங்களில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அலங்காநல்லூர் பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவர் தனது 13.05.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் செலவினங்கள் மேற்கொள்ளாமல், அச்செலவினங்கள் செய்யப்பட்டது எனவும், கொள்முதல் செய்யப்படும் செலவினங்களுக்கு உரிய வங்கிக் கணக்கு கையாளப்படவில்லை எனவும் புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவர் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 2021-22, 2022-23ஆம் ஆண்டுகளில் மற்றும் 01.04.2023 முதல் 31.10.2023 வரையிலான காலங்களில் பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரங்கள் 2005-ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் 10.11.2023 நாளிட்ட மனு மூலம் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி பொது தகவல் அலுவலரிடம் கோரியதில், பொது தகவல் அலுவலர் தனது 11.12.2023 நாளிட்ட கடிதத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 7 (9)-ன்படி தகவல்கள் வழங்க வழிவகையில்லை என தெரிவித்திருந்தார். இதனை எதிர்த்து மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு செய்ததில், மனுதாரர் கோரிய செலவின விவரங்கள் 149 பக்கங்கள் வாயிலாக மனுதாரருக்கு 15.02.2024 அன்று பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பித்த செலவின விபரங்களுக்குரிய பட்டியல்கள் (Bills) காசோலைகள் மற்றும் தினசரி புத்தகத்தின் நகல்கள் ஆகியவை வழங்கக் கோரி மனுதாரர் மீண்டும் தகவல் பெறும் சட்டத்தின் கீழ் 29.02.2024 நாளிட்ட மனு சமர்ப்பித்தார். மனுதாரர் கோரிய ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் வழங்க வழிவகையில்லை என்பதால் பேரூராட்சி அலுவலகத்தில் வருகை புரிந்து ஆவணங்களை பார்வையிட்டு தேவையான நகல்களை பெற்றுக் கொள்ளலாம் என மனுதாரருக்கு பேரூராட்சி மூலம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மனுதாரர் 25.04.2024 பேரூராட்சி அலுவலகத்திற்கு வருகை புரிந்தபோது, மனுதாரர் கோரியிருந்த பட்டியல்கள் தொடர்பான ஆவணங்கள் தணிக்கை மேற்கொள்ளும் வகையில் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டிருந்ததால், மனுதாரர் கோரிய 22 பக்கங்கள் கொண்ட

தகவல்கள் 15.05.2024 அன்று பேரூராட்சியால் வழங்கப்பட்டது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

இதற்கிடையில் மனுதாரர் திரு. N. வெங்கடேஷ் பிரபு என்பவர் 13.01.2025 அன்று மீண்டும் பேரூராட்சியில் வருகை புரிந்து தனது புகார் மனுவில் தெரிவித்திருந்த பேரூராட்சியின் வரவு - செலவு இனங்கள், பேரூராட்சியின் பணிகள் ஆகியவை பார்வையிட்டு, பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட வரவு-செலவு இனங்களில் எவ்வித குறைபாடுகளும் கண்டறிய முடியவில்லை எனவும் தான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த முறையீட்டு மனுவை திரும்பப் பெறுவதாகவும் 13.01.2025 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார் எனவும், மனுதாரர் ஆவணங்களை பேரூராட்சியில் பார்வையிடும்போது, பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தானும் உடன் இருந்ததாகவும் என்பதை பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. மு. பாலசந்திரன் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து வரவு-செலவு இனங்களுக்கும் பேரூராட்சி மன்றத்தில் தீர்மானங்கள் மூலம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது எனவும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் உரிய தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் 2023-24-ஆம் ஆண்டிற்கான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, தணிக்கை அறிக்கை வெளியிடுவதற்கு நடவடிக்கையில் உள்ளது என்பதும், பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது. மேலும், பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட வரவு–செலவு இனங்களில் எவ்வித குறைபாடும் கண்டறிய இயலவில்லை என மனுதாரரும் தெரிவித்துள்ள நிலையில் அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. N. வெங்கடேஷ் பிரபு,
புதிய 5வது வார்டு பஜனை மடத் தெரு,
அலங்காநல்லூர், வாடிப்பட்டி வட்டம்
மதுரை மாவட்டம்

2. செயல் அலுவலர்,
அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/7/25
செயலாளர்
01/7/25